# தமிழகச் சட்டப் பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் 30–1–2008 அன்று பேரவையில் படித்தளித்த அறிக்கை.

தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக செயல்படும் போக்கு குறித்து 29–1–2008 அன்று பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் போது அத்தகைய செயல்கள் பற்றி தக்க திறமையான கற்றறிந்த வழக்கறிஞர்களுடைய குழுவிலே ஆராய்ந்து அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமேயானால், அதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, இன்று (30–1–2008) காலையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நிதியமைச்சர் பேராசிரியர், நான், தலைமைச்செயலாளர் எல்.கே. திரிபாதி, அட்வகேட் ஜெனரல் மாசிலாமணி, உள்துறை செயலாளர், சட்டத் துறை செயலாளர், டி.ஜி.பி., எ.டி.ஜி.பி., (புலனாய்வுத் துறை) ஆகியோரோடு விவாதித்தோம். இதற்காக புதிதாக சட்டம் கொண்டு வர வேண்டுமா அல்லது ஏற்கனவே உள்ள சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்க இயலுமா என்றெல்லாம் கலந்தாலோசிக்கப்பட்டு, இறுதியாக எடுக்கப்பட்ட முடிவு வருமாறு :–

“தடை செய்யப்பட்டுள்ள எந்த இயக்கமாயினும் அவற்றுக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதோ, செயல்படுவதோ, துண்டு அறிக்கைகள், சுவரொட்டிகள் வெளியிடுவதோ, ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாநோன்புகள் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதோ, அவற்றில் கலந்து கொள்வதோ The Unlawful Activities (Prevention) Act, 1967 (37 of 1967) சட்டப்படி குற்றமுடையதாகும். அத்தகைய குற்றமிழைப்போர் தனிப்பட்டவராயினும், சங்கம் அல்லது அமைப்பு ரீதியில் இயங்குவோராயினும் – அவர்கள் அரசின் இந்த அறிவிப்பினை உரிய எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் மீறி மேற்கண்ட நடவடிக்கைகள் ஏதேனும் ஒன்றில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்தின்படி நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள்”.